## ஊரக வளர்ச்சியின்
## உற்ற நண்பன்

# கிராமிய பயிற்சி மையம்
# (RURAL TRAINING CENTRE)

அமராவதிபுதூர், காரைக்குடி
சிவகங்கை மாவட்டம்
தமிழ்நாடு




### அமைப்பு

இந்தியன் ஓவர்சீஸ் வங்கி | நபார்டு | இந்தியன் வங்கி

இயக்குநர்
**கிராமிய பயிற்சி மையம்**
அமராவதிபுதூர், காரைக்குடி - 630 301
✆ 94438 44651
email: rtckkdi@rediffmail.com

# கிராமிய பயிற்சி மையம்

## பணிகள் மற்றும் பயிற்சிகள்

### அமைப்பு

- இந்த மையம் தேசிய வங்கி (நபார்டு) இந்தியன் ஓவர்சீஸ் வங்கி மற்றும் இந்தியன் வங்கி இணைந்து நடத்தும் பயிற்சி நிறுவனம் ஆகும்.
- இந்நிறுவனம் தமிழ்நாடு சங்கங்களின் பதிவுச் சட்டப்படி (Tamil Nadu Societies Registration ACT - 1975) பதிவு பெற்றுள்ளது.
- 9.7.2005 அன்று மாண்புமிகு மத்திய நிதி அமைச்சர் திரு. ப. சிதம்பரம் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது.

### நோக்கங்கள்

- கிராமப்புற இளைஞர்கள் சுய தொழில் மேற்கொள்ளும் தொழில்சார் அறிவு மற்றும் திறன் பெறப் பயிற்சி அளித்தல்.
- இளைஞர்கள் கிராமப்புறங்களில் சுயதொழில் மேற்கொள்ளும் மனப்பான்மையை ஊக்குவிக்கும் பயிற்சி மற்றும் அவர்கள் தொழிலை வெற்றிகரமாக நடத்த உதவுதல்.
- ஊரகத் தொழில்நுட்பம், ஊரக வளர்ச்சி மற்றும் தொழில் முனைவோரை வளர்த்தெடுக்கும் பயிற்சிகளை தனியாக மற்றும் மற்ற சார்பு நிறுவனங்களுடன் இணைத்து கூட்டாக வழங்குதல்.
- வேளாண்மையில் வளர்ச்சி மற்றும் புதிய தொழில்நுட்ப பயிற்சிகளை விவசாயிகளுக்கு அளித்தல்
- இளைஞர்கள் ஊரக வளர்ச்சிக்கு உதவும் வகையில் சுயதொழில் மேற்கொள்ள ஊக்குவிக்கும் பயிற்சி அளித்தல்.
- உற்பத்திச் செலவுகளைக் குறைத்து, உற்பத்தித் திறனைப் பெருக்கும் பயிற்சியால் வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சிக்கு உதவுதல்.
- கிராமப்புற இளைஞர்கள் அதிக வருவாய் ஈட்டி வாழ்வில் வளம்பெற சுயதொழிலை வெற்றிகரமாக நடத்த பயிற்சி அளித்தல்.
- பயிற்சி பெற்றவர்கள் சுய தொழிலைத் தொடர்ந்து மேற்கொள்ள ஆலோசனை வழங்கி உதவுதல்.

## தகுதி

- 18–50 வயதுள்ளவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும்.
- இளைஞர்கள், பெண்கள், மாணவர்கள் மற்றும் விவசாயிகள் ஆகியோருக்கு பயிற்சி வழங்கப்படும்.
- வறுமைக்கோட்டுக்குக் கீழ் உள்ளவர்கள், மாற்றுத் திறனாளிகள், சிறுபான்மையினர்க்கு முன்னுரிமை தரப்படும்.

## பயிற்சி வகைகள்

**விவசாயத் தொழில் முனைவோர் பயிற்சி**

- மண்புழு உரம் தயாரிப்பு, சொட்டு நீர்ப் பாசனம் மூலம் பயிர்களில் உற்பத்தி அதிகரித்தல், பால் பண்ணை அமைத்தல், ஆட்டுப் பண்ணை அமைத்தல், காளான் வளர்ப்பு போன்ற பல்வேறு வேளாண் தொழில்சார் பயிற்சி.

**ஊரகத் தொழில் முனைவோர் பயிற்சி**

- தையற்கலை, இயந்திரம் மற்றும் கை மூலம் பூத்தையல் (Embroidery), ஜரிகை, ஆரி வேலைப்பாடு.
- தென்னை நார், வாழை நார், பனை ஓலை பயன்படுத்தி பொருட்கள் தயாரித்தல்.
- செல் போன் பழுது, வீட்டு உபயோகப் பொருட்கள், இரு சக்கர வாகனம் பழுது பார்த்தல்.
- கணினி மற்றும் டிடிபி (DTP) பயிற்சி.
- அழகுக் கலைப் பயிற்சி, நாப்கின் தயாரித்தல்
- செட்டிநாடு உணவு வகைகள் தயாரிப்பில் பயிற்சி.
- இதர தொழிற் பயிற்சிகள்.

**ஆலோசனை**

- சுயதொழில் தொடங்குவதற்கு வங்கிக் கடன் பெற ஆலோசனை வழங்கப்படும்

## பயிற்சி காலம்

- பயிற்சி மேற்கொள்ளும் தொழிலைப் பொறுத்து பயிற்சியின் கால அளவு மாறுபடும்.
- 2 நாளிலிருந்து 30 நாட்கள் வரை.

## பயிற்சியாளர்கள்

- கிராமிய பயிற்சி நிறுவன பயிற்சியாளர்கள் மற்றும் அரசு, கல்வி நிறுவன, தனியார் துறை தொழில்நுட்ப வல்லுநர்கள் பயிற்சி அளிப்பர்.

## இலவச பயிற்சி

- இலவச பயிற்சி அளிக்கப்படும்; பயிற்சிக் கட்டணம் எதுவுமில்லை.
- கிராமிய பயிற்சி மையத்தின் புதிய வளாகம் 10 ஏக்கர் பரப்பளவில் காரைக்குடியிலிருந்து 9 கி.மீ. தொலைவில் உள்ள அமராவதிபுதூரில் அமைந்துள்ளது.
- ஆண்கள், பெண்கள் தனித்தனியாக தங்கி உணவு வசதியுடன் இலவசமாகவே பயிற்சிக் காலம் முழுவதும் பயிற்சி பெற வசதி உள்ளது.

## தொழிற்கூடங்கள் பார்வையிடுதல்

பயிற்சிக் காலத்தில் வெற்றிகரமாக இயங்கி வரும் தொழிற்கூடங்களையும், நிறுவனங்களையும் நேரடியாகச் சென்று பார்வையிட்டு தொழில்சார் அறிவை மேம்படுத்தும் பயிற்சி அளிக்கப்படுகிறது.

## பயிற்சியில் பங்கு பெறுதல்

கிராமிய பயிற்சி மைய இயக்குநர் மற்றும் உதவி இயக்குநரை நேரில் சந்தித்தோ, தொலைபேசி / மின்னஞ்சல் மூலமாகவோ பதிவு செய்து பயிற்சியில் பங்கு பெறலாம்.



தொடர்பு முகவரி

**கிராமிய பயிற்சி மையம்**

அமராவதிபுதூர், காரைக்குடி – 630 301

✆ 94438 44651

email: rtckkdi@rediffmail.com